**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்.**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்க்ஷா, B.B.A.,LL.B (Hons).,**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 27 ஆம் நாள் திங்கட்கிழமை**
**Crl.M.P.No. 785 of 2026**
*********

சோமசுந்தரம் (வயது 50/26),
த/பெ. வள்ளிநாயகம்,
கதவு எண் 7/121, வடக்குதெரு, கெட்டியம்மாள்புரம்,
ஸ்ரீவைகுண்டம். ...மனுதாரர்/உரிமையாளர்/3 ஆவது நபர்

...எதிர்...

**<u>அரசுக்காக :-</u>**
காவல் உதவி ஆய்வாளர்,
நாசரேத் காவல் நிலையம்,
குற்ற எண். 324/2026. ... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இ.கு.பா.ச. பிரிவு 503 இன் கீழ் வழக்கு சொத்தை எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடுமாறு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் வழக்கறிஞர் : திரு. A.P. சுரேஷ்

எதிர்மனுதாரர் வழக்கறிஞர் : திருமதி. ப்ரீத்திராணி.,
உதவி அரசு வழக்கறிஞர் நிலை II.

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரர்/உரிமையாளர்/3 ஆவது நபர் அவருக்கு சொந்தமான TN 92 E 1515 என்ற பதிவெண் கொண்ட MARUTI SUZUKI SWIFT ZDI + MAGMA GRAY நிறம் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் அவரிடம் இருந்து பறிமுதல் செய்து குற்ற எண் 324/2026, பாரதிய நீதிச்சட்டம் பிரிவுகள் 126(2), 296(b), 351(2) இன் கீழ் வழக்கு பதிவு செய்து வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனம் எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் காவல்நிலையத்தில் திறந்த வெளியில் நிறுத்தப்பட்டுள்ளதால், மழையிலும் வெயிலிலும் கிடப்பதால் அதன் பயன்பாட்டு தன்மை மிகவும் பாதிக்கக்கூடிய அளவில் ஆகிவிடும் என்றும், இதனால் மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், எனவே, எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் இந்நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு சொத்துப்பொருளான TN 92 E 1515 என்ற பதிவெண் கொண்ட MARUTI SUZUKI SWIFT ZDI + MAGMA GRAY நிறம் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை இந்நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் ஒப்படைக்கும்படி உத்தரவிடுமாறு மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரிடம் இருந்து பெறப்பட்ட வாகனமானது காவல் நிலையத்தில் பாதுகாப்பாக உள்ளது என்றும், வழக்கு சொத்திற்கு

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.27 15:43:32 +0530

நீதிமன்றத்தில் பி.ஆர் எண் வாங்க வேண்டி இருப்பதாலும், வழக்கு சொத்தை மனுதாரர் வசம் திருப்பிக் கொடுக்கும் பட்சத்தில் மனுதாரர் வழக்கு சொத்தை விற்கவோ அல்லது அழிக்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ வாய்ப்புள்ளது என்றும், மேலும் அவர் வழக்கின் சொத்தினை வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமாட்டார் என்றும் கூறி, எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது.

3. இரு தரப்பிலும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. வழக்கு சொத்துப்பொருளான TN 92 E 1515 என்ற பதிவெண் கொண்ட MARUTI SUZUKI SWIFT ZDI + MAGMA GRAY நிறம் கொண்ட நான்கு சக்கர வாகனம் ஆனது மனுதாரருக்கு சொந்தமானது என்பது, மனுதாரர் தாக்கல் செய்துள்ள வாகனத்தின் அசல் ஆர்.சி புத்தகத்தின் நகல் மூலம் தெரிய வருவதாலும், Sundara Bai Ambalal Desai -Vs- State of Gujarat 2003 SCC Crl. 1943 என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் படியும், வாகனமானது வெயில், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் துருபிடித்து அழியக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டும், மேற்படி வழக்கு சொத்தான TN 92 E 1515 என்ற பதிவெண் கொண்ட MARUTI SUZUKI SWIFT ZDI + MAGMA GRAY நிறம் கொண்ட நான்கு சக்கர வாகனத்தை எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் இந்நீதிமன்றத்தில் ஒரு வார காலத்திற்குள் ஒப்படைக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு, என்னால் இன்று 27.07.2026 ஆம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.27 15:43:36 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.

Visit **ecourts.gov.in** for updates or download mobile app “**eCourts Services**” from Android or iOS